நல்லூர் பிரதேச நூலகம்.


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 04 புதன்கிழமை (20-08-1997) UTHAYAN A lively National Tamil Daily ஒளி: 255


## இராணுவம் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

கொக்குவில், உயரப்புலம், மானிப்பாய், சுதுமலை, தாவடி, இணுவில் பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதனால் இப்பகுதிகளில் வழமை நிலை நேற்றுக்காலை பாதிக்கப்பட்டது.

(உ-15-100)

# புளியங்குளத்தை நோக்கி இராணுவம் முன்னேற முயற்சி

## வழி மறித்துப் புலிகள் பெரும் தாக்கு!

வவுனியா, ஓகஸ்ட் 20

'வெற்றி உறுதி' படை நடவடிக்கையை ஆரம்பித்து புளியங்குளத்துக்கு தெற்கே வரை முன்னேறிய ஸ்ரீலங்காப் படைகள் நேற்றுக் காலை அங்கிருந்து புளியங்குளத்தின் மையப்பகுதியை நோக்கி நகர முயன்ற போது புலிகள் அவர்களை வழிமறித்து பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

அப்பகுதியில் மீண்டும் பெரும் யுத்தம் ஒன்று வெடித்துள்ளது.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் மூன்றாம் கட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் —

நேற்று முன்தினம் பிற்பகலில் இருந்தே புளியங்குளப் பக்கமாக பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

புளியங்குளம் பழைய வாடிப் பகுதியிலிருந்து நேற்றுக் காலை 6 மணியளவில் முன்னேற முயன்ற படையினரை வழிமறித்துத் தாங்கள் பெரும் தாக்குதலை ஆரம்பித்ததாக புலிகள் அறிவித்தனர்.

நேற்றைய சமரில் உயிரிழந்தோர் குறித்து இரு தரப்பும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டன.

ஏழு படையினர் உயிரிழந்ததாகவும் —

43 படையினர் காயமுற்றதாகவும் —

புலிகள் தரப்பில் 21 பேர் வரை கொல்லப்பட 20 புலிகள் வரை காயமடைந்ததாகவும்-

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத் தரப்பில் பத்துப் பேர் கொல்லப்பட்டதாகவும் —

ஐம்பத்தேழு பேர் வரை படுகாயமடைந்ததாகவும் —

சுயாதீன வானொலிச் செய்தி ஒன்று நேற்றிரவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 2 டாங்கிகள் நேற்று தகர்ப்பு?

வவுனியா, ஓக. 20

புளியங்குளத்துக்குத் தெற்கேயிருந்து நேற்றுக் காலை முன்னேற முயன்ற படையினர் மீது தாங்கள் நடத்திய பதிலடித் தாக்குதலின் போது படையினரின் இரு டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் —

சேதமடைந்த மற்றைய இரு டாங்கிகள் பின்வாங்கிச் சென்றதாகவும் —

73 மி. மீற்றர் துப்பாக்கி பொருத்தப்பட்ட துருப்புக்காவி மற்றும் ஆயுதங்களைத் தாங்கள் படையினரிடம் இருந்து கைப்பற்றியிருப்பதாகவும் —

''புலிகளின் குரல்'' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

ஈ. வை. எல். 73 எம்.எம். துப்பாக்கி — 1, அதற்குரிய ஷெல் — 27, ஏ. கே. எல். எம் ஜி. — 1, எலக்ட்ரோனிக் பி. கே. — 1, ரி- 56 ரைபிள் — 7, ஐ. எம் ரவைகள் — 14 ஆயிரத்து 750, பி. கே. ரவைகள் — 4,500, பி. கே. ரவைகள் லிங்குடன் — 650 ஆகியவை மற்றும் ஷெல்கள், செற்றுகள், துப்பாக்கிகள் தங்களால் கைப்பற்றப்பட்டதாகப் புலிகள் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

(உ-21-164)

## கோண்டாவில், மானிப்பாய் சம்பவங்களில் இருவர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 20

மானிப்பாய், கோண்டாவில் பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற இரு சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த இரு இளைஞர்களும் விடுதலைப் புலிகள் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் இரு சம்பவங்களிலும் உயிரிழந்த இரண்டு இளைஞர்களின் சடலங்களை சுன்னாகம் பொலிஸார் நேற்றும், நேற்று முன்தினம் மாலையும் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சுமார் 25 வயதும், 35 வயதும் மதிக்கத்தக்க இந்த இரு இளைஞர்களினது சடலங்களும் இனம் காணும் பொருட்டும் மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன.

### கோண்டாவிலில்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள வீடொன்றை நேற்று முன்தினம் காலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கூரேயை விடுவித்து நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஓக. 20

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐ. தே. கட்சியின் முன்னாள் செயலாளரும், அமைச்சருமான சிறிசேன கூரேயை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கூரே கைது செய்யப்பட்டமை, தடுத்து வைக்கப்பட்டமை ஆகியன அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று தெரிவித்த நீதிமன்றம், அவருக்கு நஷ்டஈடாக இரண்டு லட்சம் ரூபா வழங்கும்படியும் அரசுத் தரப்புக்கு உத்தரவிட்டது.

கூரேயைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பதற்கான தடுப்புக்காவல் உத்தரவைப் பிறப்பித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கே கூரேயை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கூரே மீது தொடர்ந்து சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதி சந்திரிகா தகவல்

கொழும்பு, ஓக. 20

கூரே தடுப்புக்காவலில் இருந்து நீதிமன்ற உத்தரவுப் பிரகாரம் விசாரிக்கப்பட்டாலும்-

முன்னைய ஆட்சிக்காலத்திலும், புதிய அரசு பதவியேற்ற பின்னரும் அவர் புரிந்த தவறுகளுக்காக அவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் கேட்ட கேள்விகளுக்கு வானொலி - தொலைக்காட்சி ஆகியவை மூலம் நேற்று பதிலளித்த போதே இவ்வாறு அவர் கூறினார்.

சிறிசேன கூரே நீதிமன்றத்தில் விடுவிக்கப்பட்டது குறித்து ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்த சமயம் கூரேக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்.

(உ-10)

## கூரே விடுதலை குறித்து முதல் நாளே சுவரொட்டி!

கொழும்பு, ஓக. 20

சிறிசேன கூரேயை விடுவிக்குமாறு நீதிமன்றம் நேற்றுத்தான் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அதற்கு முதல் நாளே கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் சிறிசேன கூரே விடுதலை என்று தெரிவிக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு விட்டன.

பொதுமக்களின் கேள்விகளுக்கு வானொலி—தொலைக்காட்சி ஆகியவை மூலம் பதிலளித்த ஜனாதிபதியிடம் இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட போது —

இந்த விடயம் குறித்து நீதிமன்றம் சிந்திக்கவேண்டும் என்று அவர் பதிலளித்தார்.

(உ-10)

### புலிகளும், ஐ. தே. கவும் ஆதரித்தாலும் விட்டாலும்

# தீர்வு திட்டத்தை அரசு நிறைவேற்றியே தீரும்!

## ஜனாதிபதி நேற்று சூளுரை

கொழும்பு, ஓக. 20

புலிகளின் ஆதரவு கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி —

ஐ. தே. கட்சி ஆதரவு தந்தால் என்ன, தராவிட்டால் என்ன —

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்.

இவ்வாறு சூளுரைத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவியேற்று மூன்று வருடங்கள் நிறைவுற்றதை ஒட்டி—

[illegible] மூலமும் தொலைபேசி மூலமும் கேட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா நேற்றிரவு 8.30 மணிக்கு கண்டியில் உள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்திலிருந்து பதிலளித்தார்.

இது தொடர்பான நேரடி ஒலி, ஒளிபரப்பு அஞ்சல் ரூபவாஹினியிலும் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தாலும் மேற்கொள்ளப்பட்டன.

அந்நிகழ்ச்சியில் தற்போது இடம்பெற்று வரும் யுத்தம் தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

இந்த அரசு ஆட்சிக்கு வந்தபோது வடபகுதி முற்றாகவும் கிழக்கில் சில பகுதிகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது ஆனால் தற்போது இதில் 75 வீதமான பகுதி அரசின் காட்டுபாட்டுக்குள் வந்துள்ளது. தற்போது பிரபாகரனின் கெரில்லா அமைப்பு வடபகுதிக் காடுகளுக்குள் தஞ்சம் புகுந்துள்ளது.

மன்னாருக்கான தரை வழிப் பாதை தற்போது திறக்கப்பட்டுள்ளது. மடுக் கோயிலுக்கு தற்போது பக்தர்கள் வருவதாக என்னைச் சந்தித்த மடுக்கோயிலைச் சேர்ந்த ஆயர் தெரிவித்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள முரண்பாட்டை நீக்கா விடில் விரைவில் தொழிற்சங்க நடவடிக்கை

### தொழிற்சங்க சம்மேளனம் காலக்கெடு

கொழும்பு, ஓக. 20

தற்போது அரசாங்க ஊழியர்களிடையே நிலவும் சம்பள முரண்பாடுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நீக்காவிடில் முன்னறிவித்தல் எதுவுமின்றி தீவிர தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க அரச துறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்தை தொழிற்சங்க சம்மேளனத்தின் அழைப்பாளர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு 'பாக்ஸ்' செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

''புதிய சம்பளத் திட்டம் கடந்த ஜனவரி மாதத்தில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

இதில் பல சம்பள முரண்பாடுகள் உள்ளன.

இது குறித்து அரசாங்கத்தின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டு சென்றோம். இருப்பினும் அரசு இது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்று தொழிற்சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (இ-10)

### பட்டலந்த வதை முகாம்!

## ரணிலுக்கும் மற்றும் இருவருக்கும் ஆணைக்குழு அழைப்பாணை

கொழும்பு, ஓக. 20

பட்டலந்த வதை முகாம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்க வருமாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவுக்கும் இரண்டு முன்னாள் அமைச்சர்களுக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருடன் முன்னாள் அமைச்சர்களான ஜோன் அமரதுங்கா, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோருக்கும் அழைப்பாணை அனுப்புமாறு ஆணைக்குழுவின் தலைவரான மேல் நீதிமன்ற நீதியரசர் டி. ஜெய ஜெயவிக்கிரம உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன்படி எதிர்க் கட்சித் தலைவர் அடுத்த மாதம் 3ஆம் திகதியும் ஜோன் அமரதுங்கா அடுத்த மாதம் 26ஆம் திகதியும் ஜோசப் மைக்கல் பெரேரா 27ஆம் திகதியும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க வேண்டும்.

### ஐக்கிய கழக பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 20

அரியாலை ஐக்கிய கழகத்தின் பொதுக்கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

ஐக்கிய கழக பொன்விழா கொண்டாட்டம் பற்றியும் விளையாட்டையும் கலையையும் ஊக்குவிப்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன. (இ-5)

### சமய சந்நிதிகளில்

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள இராமநாதேஸ்வரர் கோயில் வருடாந்த மணவாளக்கோல விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

ஆடிப் பூர தினத்தில் நடைபெறும் இந்த உற்சவத்தை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தேவஸ்தானம் நடத்தி வருகின்றது. (இ-5)

★ ★ ★

சில்லாலைப் பங்கைச் சேர்ந்த அருட்திரு. ஜேம்ஸ் டன்ஸ்ரன் அடிகளார் தமது முதற் திருப்பலியை இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார். (இ)

### கால் நடைகள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

கோப்பாயிலும், இருபாலையிலும் கடந்த இருநாள்களுக்கு முன் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவங்களில் ஒருமாடும், ஒருஆடும் கால்களை இழந்தன.

கோப்பாய் மத்தியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் மாடும், இருபாலை கிழக்கில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் ஆடும் ஒவ்வொரு கால்களை இழந்தன. (இ-15)

### நெடுந்தீவில் மெழுகுவர்த்தி தொழிற்சாலை

நெடுந்தீவு, ஓக. 20

நெடுந்தீவில் மெழுகுவர்த்தித் தொழிற்சாலை அமைப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரத்தை நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம் எதிர்பார்த்துள்ளது.

கூட்டுறவு ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்ததும் தாமதமின்றி மெழுகுவர்த்தி தொழிற்சாலையை ஆரம்பிக்கச் சங்கம் நடவடிக்கை எடுக்குமெனத் தலைவர் எஸ். கோபாலசிங்கம், பொது முகாமையாளர் இரா. தர்மலிங்கம் ஆகியோர் தெரிவித்தனர். (இ-111)


## எமது ஒடியோ டிஸ்க் [CD] வெளியீடுகள்

- ★ தாயின் மணிக்கொடி
- ★ கடவுள்
- ★ ஓடம்
- ★ கள்வன்
- ★ என்னோடு கலந்துவிடு
- ★ இனி எல்லாம் சுகமே
- ★ நாட்டுப்புற நாயகன்

என்றும் தரமான ஒடியோ, வீடியோ CD பதிவுகளுக்கு

**சுப்பஸோ**

வீடியோ, ஒடியோ சென்ரர்

100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் ஒடியோ, வீடியோ CD பிளேயர்கள் விற்பனைக்குண்டு.

[சி/1348]

## முயற்சி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

### போதனாசிரியர் தேவை

தமிழ்தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி

தகுதியுடையோர் 01 - 09 - 97 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

அ. நல்லதம்பி
உபதலைவர்.

(சி/1345)

## ராகவன் கல்வி நிலையம்

பலாலி வீதி,
உரும்பிராய்.

**O/L**

வினாவிடை வகுப்பு
பிரிவு II

ஆரம்பம்: 21-08-1997
வியா. பி.ப. 3-00 மணி

ஆசிரியர்:
திரு. S. குணசீலன்

குறிப்பு: பிரிவு I இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நிர்வாகி

(49104)

## உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவக மாணவர்களுக்கு அறிவித்தல் (A.T.I.)

மேற்படி நிறுவக மாணவர்களுக்கு இன்றும் நாளையும் [புதன், வியாழன்] நிறுவனத்தில் 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை மண்எண்ணெய் வழங்கப்படும்.

செயலாளர்,
மாணவர் ஒன்றியம்.

(49107)


## மரண அறிவித்தல்கள்

### சந்தையா அரியகுட்டி (குட்டித்தம்பி)

நவாலியைப் பிறப்பிடமாகவும் 72/4, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சந்தையா அரியகுட்டி (குட்டித்தம்பி) 19-08-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தையா - செல்லாச்சி தம்பதிகளின் மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், கிட்டுணுவின் (நவாலி) அருமைச்சகோதரனும், திருநாவுக்கரசு (புத்தூர்), மகேந்திரன் (நாயன்மார் கட்டு), சத்தியேஸ்வரி, றாத்புஸ்பராணி (கல்வாரி தேவாலயம்), சறோஜினி, புஸ்பகாந்தி, புஸ்பலீலா, மகிழ்ரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, செல்வராணி, பாலசிங்கம் (கதிரொளி வல்வெட்டி), வேலாயுதம் (சைக்கிள் கடை), அரியராசா (கொழும்பு), திருமகள் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன் (யா/மத்திய கல்லூரி), சிந்துஜா (யா/இந்து மகளிர் கல்லூரி), செந்தூரன் (யா/மத்திய கல்லூரி), மிருநாளினி, மயூரன் (யா/மத்திய கல்லூரி), சௌக்கியா, ஜெயப்பிரியந்தினி, நிருபன், தனஞ்சயன், ஜனார்த்தனி (யா/இந்து மகளிர் கல்லூரி), கஜலக்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-08-97) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி அரியகுட்டி
(மனைவி)

72/4 பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(49106)

### திருமதி சீவரத்தினம் கேதாரகௌரி

உரும்பிராய் கிழக்கு அரசடி வீதியைச் சேர்ந்த சீவரத்தினம் கேதாரகௌரி 19-08-97 இல் தனது இல்லத்தில் காலமானார்.

இவர் க. சீவரத்தினம் (ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜண்ட்) அவர்களின் அன்பு மனைவியும், வர்ணரூபியின் (விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்) அன்புத் தாயாரும், சுசிலா (வருமானவரித் திணைக்களம், கொழும்பு), கதிரவாசன் (கனடா), காலஞ்சென்ற தேவகௌரி, யோககௌரி, தர்மகௌரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-8-97) காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இணுவில் காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சீவரத்தினம்
(கணவன்)

உரும்பிராய் கிழக்கு,
அரசடி வீதி,
உரும்பிராய்.

(49103)

### திருமதி வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை 21-07-97 திங்களன்று இறைவனடி சேர்ந்தார். மறுநாள் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் ஸ்கந்தபுரம் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னார் துன்னாலை காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் திரு. நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி பாக்கியம் தம்பையா (இளைப்பாறிய நெசவு ஆசிரியை துன்னாலை), ஆறுமுகம் ஆகியோரின் பிரியமாதாவும் திரு. செ. தம்பையா (உபதபாலதிபர், ஸ்கந்தபுரம்) திருமதி சின்னப்பிள்ளை நடராசா (இளைப்பாறிய ஆசிரியை, கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சகிதா (யாழ். பல்கலைக்கழகம்), பரிதா (யாழ். பல்கலைக்கழகம்), கவிதா (அக்கராயன் ப.நோ.கூ.ச. பயிலுனர்) சுஜாதா, இராஜகணேசன் (ஆசிரியர் மந்துவில் R C), இராஜமோகன் (ஆசிரியர் தென் ஆபிரிக்கா), இராஜவரதன் (T. O. கோணமாமலை), இராஜவிசாகன் (பேராதெனியா பல்கலைக் கழகம்), திருமதி ஜானகி அலெக்ஸ் (ஆசிரியை இங்கிலாந்து), திருமதி சசிகலா ரவிராஜ் (ஆசிரியை வீரசிங்கம் M V) ஆகியோரின் நேசப்பேர்த்தியும், ஜெனன், ஆர்த்தி, ஆர்வின் ஆகியோரின் பாசப் பூட்டியுமாவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. நடராசா
(மகன்)

''உதயபானு''
கண்டி வீதி, கொடிகாமம்.

(சி/1349)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பனின் யோசனைகளை கருணாநிதி - பட்டேல் ஏற்றனர்!

## நக்கீரன் ஆசிரியர் மீண்டும் காடு செல்வார்

சென்னை ஒக. 20

பிரபல சந்தன மரக்கடத்தல் வீரப்பனும் அவனது சகாக்களும் சரண் அடைவதற்குத் தெரிவித்த யோச



னையை ஏற்பது என்று தமிழ்நாடு அரசும் கர்நாடக அரசும் நேற்று முடிவு செய்தன.

சரணடையும் பட்சத்தில் வீரப்பனதும் அவனின் சகாக்களினதும் உயிருக்கு பாதுகாப்பு அளிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கர்நாடக முதலமைச்சர் ஜே. எச். பட்டேலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதியும் நேற்று சென்னையில் நடத்திய பேச்சுவார்த்தையின் போது வீரப்பனின் யோசனையை ஏற்பது என்றும்—

அவனது உயிருக்குப் பாதுகாப்பு வழங்குவது என்றும்— முடிவு செய்யப்பட்டது.

இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்புத் தூதுவராகச் செயற்பட்டு வரும் நக்கீரன் ஆசிரியர் கோபால் அடுத்த ஓரிரு நாள்களில் மீண்டும் காட்டுக்குள் சென்று வீரப்பனைச் சந்திப்பார் என்று இரு முதலமைச்சர்களும் நேற்று சென்னையில் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

வீரப்பனுடன் மூன்றாம் சுற்றுப் பேச்சு நடத்தி விட்டு நக்கீரன் ஆசிரியர் கோபால் வந்த பின்பே, வீரப்பன் சரண் அடையும் நாள், நேரம் ஆகியவை குறித்து தீர்மானிக்கப்படும் என்றும்—

காட்டைச்சுற்றி நிற்கும் கர்நாடக சிறப்புப் படையினர் விலக்கிக் கொள்ளப்படுவர் என்றும் — கூட்டு செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 13 ஆம் திகதியில் இருந்து தனது காவலில் இருக்கும் வனத்துறையைச்



சேர்ந்த 13 பேரையும் விடுதலை செய்வதற்கு வீரப்பன் இணங்கி உள்ளான்.

# ஹிஸ்புல்லாக் கெரில்லாக்கள் இஸ்ரேலுக்குள் றொக்கட் வீச்சு

## மக்கள் பெருமளவு இடம் பெயர்வு

தென் லெபனானில் உள்ள தீவிரவாத இயக்கமான ஹிஸ்புல்லாக் கெரில்லாக்கள் நேற்று வடக்கு இஸ்ரேல் மீது அடுத்தடுத்து றொக்கெட்டுக்களை ஏவினர்:

தென்லெபனானில் நிலை கொண்டுள்ள இஸ்ரேல் படைகள் சமீபத்தில் தமது பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே சென்று நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கு முகமாக இந்த றொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலின் போது அறுவர் கொல்லப்பட்டிருந்தனர்.

ஹிஸ்புல்லாக்கெரில்லாக்களின் தாக்குதலை அடுத்து வட இஸ்ரேலின் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

அதேசமயம் தென்லெபனானில்சண்டை நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழு இந்த வாரம் சந்திக்கும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-5)

## கரிபியன் தீவில் எரிமலை அபாயம்

கரிபியன் தீவுகளைச் சேர்ந்த மொன்ரிசாராஜ் என்ற தீவிலுள்ளவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவதற்கு உதவுவதற்காக பிரிட்டிஷ் அரச போர்க்கப்பல் ஒன்றை அனுப்பி உள்ளது.

மிகப்பெரிய எரிமலை ஒன்று வெடிக்கும் அபாயம் அங்கு அதிகரித்துள்ளதால் இது போன்ற நடவடிக்கை அவசியமாகி விட்டது என பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார். (இ-5)

# கம்போடியாவின் வட பகுதியில் ஹுன்சென் படைகள் தாக்குதல்!

## 20 ஆயிரம் கம்போடியர் தாய்லாந்துக்குள் தஞ்சம்!

நொம்பென், ஒக. 20

கம்போடியாவின் வடபகுதியில் கம்போடியாவின் முன்னாள் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித் ஆதரவுப் படைகளின் பலம் வாய்ந்த கோட்டையாகக் கருதப்பட்டு வந்த ஓ'ஸ்மச் என்னும் நகரம் மீது ஹுன்சென் ஆதரவுப் படைகள் நேற்று இறுதித் தாக்குதலை மேற்கொண்டன.

ஓ'ஸ்மச் நகரம் அடுத்த 24 மணி நேரத்துக்குள் கைப்பற்றப்பட்டு விடும் என்று கம்போடியாவில் அதிகாரத்தை முழுதாகப் பொறுப்பேற்றுள்ள ஹுன்சென்னின் தளபதி ஜெனரல் மீஸ்சோபியா தெரிவித்தார்:

ஹுன்சென் ஆதரவு கம்போடிய அரச படைகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்தன அடுத்து கம்போடியாவின் வடபகுதி நகரங்களில் வசித்து வந்த மக்களில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்காக தாய்லாந்து எல்லைக்குள் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் தப்பி வருவதற்கு வசதியாக தாய்லாந்து அரசாங்கம் தனது எல்லையில் உள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி உள்ளது:

ஹுன்சென்னால் பதவி கவிழ்க்கப்பட்ட இளவரசர் நொரடோம் றணரித் பிரான்ஸில் இருந்து பிலிப்பீன்ஸ் வந்துள்ளார்.

ஹுன்சென் ஆதரவு அரசுக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார்.

கம்போடியாவின் வடபகுதியில் உள்ள தனது ஆதரவுப் படைகளுடன் இணைந்து கொண்டு ஹுன் அரசுக்கு எதிரான போரை நடத்தப் போவதாக அவர் அறிவித்திருந்த சில மணி நேரத்துக்குப் பின் ஹுன்சென் தனது படைகளை கம்போடியாவின் வடபகுதிக்கு அனுப்பி இருந்தார்.

தாய்லாந்து எல்லைக்குச் சமீபமாக கம்போடியாவின் வட பகுதியை முக்கிய தளமாகக் கொண்டு செயற்பட்டு வந்த கெமரூச் படைகளும் இளவரசர் றணரித்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

கெமரூச் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கக் கூடாது என்று ஹுன்சென் கோரி வருகிறார். கெமரூச் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்பது இளவரசர் றணரித்தின் நிலைப்பாடு.

இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு இளவரசர் றணரித் பதவி இழப்பதற்கு கெமரூச் விவகாரமும் ஒரு காரணமாக இருந்தது. (இ)

## ஈரான் யாத்திரிகர் ஈராக் செல்வர்

தெஹ்ரான், ஒக. 20

ஈரானிய யாத்திரிகர்கள் ஈராக்கிலுள்ள ஷியா முஸ்லிம் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என ஈராக்கிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே சண்டை ஆரம்பமானது முதல் ஈரானிய யாத்திரிகர்கள் ஈராக்குக்குச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது. (இ-5)

# பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு பொலீஸாருக்கு அதிக அதிகாரம்

## பாகிஸ்தானில் புதிய சட்டம் அங்கீகாரம்

இஸ்லாமாபாத், ஒக. 20

பாகிஸ்தான் ஜனாதிபதி பாரூக் அஹமட் லெஹாரி அந்நாட்டுப் பொலீஸாருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் சர்ச்சைக்குரிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

கைது ஆணை இல்லாமல் சந்தேகப்படும் எந்த ஒரு நபரையும் கைது செய்யவும்—

வீடு புகுந்து சோதனை நடத்தவும்— பொலீஸாருக்கு அதிகாரம் வழங்குகின்றது.

பயங்கரவாதத்தில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை விதிக்கவும் அந்தச்சட்டம் வகை செய்கின்றது.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட இந்தச்சட்டம் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கின்றது.

எனினும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட அத்தகைய சட்டம் அவசியம் என்று பாகிஸ்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (இ-5)

# பெற்றோல் விற்பனை நிலையங்கள் தமிழ் நாட்டில் வேலை நிறுத்தம்

புதுடில்லி, ஓகஸ்ட் 20

பெற்றோல் விற்பனையாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் நாட்டில் ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட பெற்றோல் விற்பனை நிலையங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை 24 மணிநேரம் மூடப்பட்டிருந்தன.

பெற்றோல் விநியோகஸ்தர்களுக்கான கமிஷன் தொகையை அதிகரித்துத் தர வேண்டும் -

பெற்றோலியப் பொருள்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்திலிருந்து விலக்களிக்க வேண்டும்—என்பன உள்ளிட்ட 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக தமிழ் நாடு பெற்றோலிய விற்பனையாளர் சங்கத்தின் செயலாளர் கே. கண்ணன் தெரிவித்தார்.

## சென்னையில் பஸ் விபத்து: 12 பேர் பலி!

சென்னை, ஓகஸ்ட் 20

சென்னைக்கு அருகே நேற்று இடம் பெற்ற பஸ்—லொறி மோதலில் 12 பேர் கொல்லப்பட்டனர். 10பேர் காயம் அடைந்தனர்.

தூத்துக்குடியில் இருந்து சென்னை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் இந்த [illegible] இறந்தவர்கள் ஆவார். (இ)

# பலஸ்தீனரின் நிதியில் ஒருபகுதியை வெளியிட இஸ்ரேல் முடிவு

ஜெரூசலேம், ஒக. 20

ஜெரூசலேம் சந்தைப்பகுதியில் கடந்த மாதம் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டு வெடிப்புகளுக்கும் பின்னர் முடக்கி வைத்திருந்த பலஸ்தீனர்களின் 7 கோடி டொலர் பணத்தில் மூன்றில் ஒரு பகுதியை வெளியிடுவதாக இஸ்ரேலிய அரசு அறிவித்துள்ளது.

**உலக அரங்கில்**

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நந்தனியாகு தனது வெளியுறவு மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் இந்த நிதிமாற்ற நடவடிக்கைக்கு ஒப்புதலளிக்க முடிவு செய்தார்.

ஜூலை 30 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புக்குப் பின்னர் இஸ்ரேலிய அரசு மேற்குக்கரை, காஸா நிலப்பகுதிகளை மூடுமாறு உத்தரவிட்டதோடு, பலஸ்தீனர்களின் நிதியை முடக்கி வைக்கவும் ஆணை பிறப்பித்திருந்தது.

இஸ்ரேல், பலஸ்தீனத்துக்கு விதித்துள்ள கடும் தடைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அத்தியாவசிய மற்ற இஸ்ரேலியப் பொருள்களை பகிஷ்கரிப்பதாக பலஸ்தீனம் அறிவித்திருந்தது. (இ-5)

## மிர் விண்கலத்தில் கோளாறு

மொஸ்கோ, ஒக. 20

ரஷ்யாவின் 'மிர்' விண்வெளிக்கலம் மேலும் பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன் கணனி பழுதானதைத் தொடர்ந்து அது கட்டுப்பாடில்லாது சுழன்றதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சூரியனை நோக்கி இருக்க வேண்டிய நிலையை அது இழந்தது.

எரிசக்தி இழப்பைத் தவிர்க்க அவசியமற்ற பகுதிகளின் செயற்பாட்டைப் பொறியியலாளர்கள் துண்டித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச்சபை ஊழியரின் சம்பளம் மாதா மாதம் கிடைக்கும்

## தாமதத்தை நீக்க பொது முகாமையாளர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக. 20

வடபிராந்திய போக்குவரத்துசபை ஊழியர்களின் சம்பளத்தை அந்த அந்த மாதத்திலேயே வழங்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் க. சொக்கலிங்கத்துக்கும், மத்திய போக்குவரத்து பொதுமுகாமையாளருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை சுமுகமான முறையில் செயற்பட்ட போதும் ஊழியர்களுக்கான சம்பளம் காலதாமதமாகவே வழங்கப்படுகிறது என்றும் —

இலங்கையில் உள்ள ஏனைய டிப்போ ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் திகதியில் அவர்களும் சம்பளம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் — கொழும்பு சென்றிருந்த க. சொக்கலிங்கம் மத்திய போக்குவரத்து பொதுமுகாமையாளருடன் நடத்திய பேச்சுக்களின் போது வலியுறுத்தினார்.

மாதாந்த சம்பளம் அலுவலக செயற்பாட்டு செலவுகள், இயந்திர பராமரிப்பு செலவுகள் ஆகியவற்றுக்கு எவ்வளவு நிதி தேவை என்பதை அறியத்தருமாறும் —

மாதாமாதம் அந்தத் தொகையை தாம் அனுப்புவதாகவும் —

பின்னர் கணக்கைச் சமர்ப்பிக்குமாறும் — மத்திய பொது முகாமையாளர் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து யாழ்ப்பாணம் திரும்பிய க. சொக்கலிங்கம் மாதாந்தம் மேற்கண்ட செலவுகளுக்கு 33 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவை அனுப்புமாறு அறிவித்துள்ளார். (இ-3)

# 20 பஸ்கள் புதிதாக சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், ஒக. 20

அடுத்த இரண்டு மாத காலத்துக்குள் யாழ். மாவட்டத்துக்கு 20 பஸ்களை அனுப்ப மத்திய போக்குவரத்து சபைப் பொது முகாமையாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த பஸ்களில் முதற் கட்டமாக மூன்று "அசோக் லேலண்ட்" புதிய பஸ்கள் பெறப்பட்டு கொழும்பு துறைமுகத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும்—

விரைவில் கப்பல் மூலம் இந்த பஸ்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் 38 பஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளன.

கூடுதலான மக்கள் வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பியுள்ளதால், அவர்களுக்கு சிறந்த சேவையை வழங்க மேலும் 20 பஸ்களை அனுப்புமாறும்— வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் ச. சொக்கலிங்கம் மத்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளரைக் கேட்டிருந்தார். (இ-3)

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நஷ்டத்துக்கு மேல் நஷ்டத்தில்!

கொழும்பு, ஒக. 20

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் இருந்து ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 5 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்கு 4.6 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது. (உ-10)

# நன்றி கூறுகிறோம்

கடந்த 11. 8. 97 திங்கட்கிழமை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் எங்களால் தவற விடப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் பெறுமதியான நகைகள், பணம் கொண்ட கைப் பையைக் கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்த பஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் கடமையுணர்வையும் நேர்மையையும் பாராட்டுவதுடன் எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி நரேந்திரன்

நெடுந்தீவு-3 (49095)

# துர்க்கை அம்மன் மகா கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

மகா கும்பாபிஷேகக் கிரியைகள் செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகும். மகா கும்பாபிஷேக விழாவுக்கு மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமை வகிப்பார்.

மகா கும்பாபிஷேக சர்வ போதகாசிரியராக சிவஸ்ரீ தா மகாதேவாக் குருக்களும், சர்வசாதகாசிரியராக சிவஸ்ரீ விஸ்வநாராயண சர்மாவும் பணியாற்றுவர். பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆவார்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி அம்மன் ஆலயத்திற்கு இப்போது அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் சென்று வழிபடுகிறார்கள். ஆலயத்திற்குச் சென்று வருவதில் இருந்த சிரமங்கள் யாவும் நீக்கப்பட்டுவிட்டன.

# அதிபர்கள் கலந்துரையாடல்

"யுனிசெவ்" திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான (வலயம்-1) கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர கல்லூரியில் இடம் பெறும். (இ)

கந்தளாய்ப் பகுதியில்

# வாகனகொள்கலனில் மட்டுமே எரிபொருள் நிரப்பப்படும்

கொழும்பு, ஒகஸ்ட் 20

கிழக்கு மாகாணம், கந்தளாய்ப் பகுதியில் எரிபொருள்கள் வாகனங்களின் கொள்கலன்களிலேயே நிரப்பப்பட வேண்டும் என்றும் கொள்கலனில் எடுத்துச் செல்ல வழங்க வேண்டாம் என்றும் எரிபொருள் நிலையங்களுக்கு படைத்தரப்பினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# விஞ்ஞான சங்க வருடாந்த அமர்வு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 5 ஆவது வருடாந்த அமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இதனை ஆரம்பித்து வைப்பார். இந்நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக பௌதிக விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

வரவேற்புரையை யாழ். விஞ்ஞான சங்கத் தலைவர் பேராசிரியர், வி. நவரட்ணராஜா நிகழ்த்துவார். இதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரை நிகழ்த்துவார்.

காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகும் பிரிவுத்தலைமையுரைகளில் முதலாவதாக ஏ — பிரிவுத் தலைமையுரையை பேராசிரியர் கே. கந்தசாமி 'உடுக்களின் கூர்ப்பு' என்னும் தலைப்பிலும்,

பி பிரிவு தலைமையுரையை கலாநிதி எஸ். மகேசன் "மெய், பொய்ப்போலிகள் — கற்கைக்கு ஒரு கருவி" எனும் தலைப்பிலும் —

டி — பிரிவு தலைமையுரையை என். சண்முகலிங்கன் "நவீனத்துவமும் அபிவிருத்தியும் — ஒரு சமுதாய நோக்கில் ஆய்வு" எனும் தலைப்பிலும் வழங்குவர்.

அதேதினம் பிற்பகல் 2-00 மணிக்கு சி — பிரிவு தலைமை உரையை வைத்திய கலாநிதி என். சிவராசா "யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தமும் ஆரோக்கியமும்" எனும் தலைப்பில் வழங்குவார்.

மேற்படி விரிவுரைகளில் பொது மக்களும் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நிவாரணம்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை 18 ஆவது சுற்று 46 ஆவது புள்ளிக்கான நிவாரணப் பொருள்கள் தற்சமயம் விநியோகிக்கப்படுகின்றன.

# கண்ணீர் அஞ்சலி

யா / கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி. அதிபர்

திரு. வே. பாலசுப்பிரமணியம்

அவர்களின் மாமனார்

அமரர்

## கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை


அவர்கள் 14 - 08 - 1997 இல் அமரத்துவம் அடைந்தார். அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள்.

[49101]

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 04 — 1959



உதிர்வு: 20 — 08 — 1990

சுவிஸில் அகாலமரணம் எய்திய

## செல்வன் தவராசா இராசரத்தினம்

(பாலன், குப்பிளான் கேணியடி)

ஏழு ஆண்டுகள் சென்றாலும் வாடுகிறோம் உன் நினைவால்! குப்பிளான் மணற் பரப்பில், விக்னேஸ்வரா கல்லூரியில் வளமான கல்வி கற்று. வித்தைகள் பல கற்று, வீசும் தென்றலாய்! சுவிஸ்நகரில் சாதனைகள் பல புரிந்து வீறுநடை கொண்டு விரைவாக எங்கு சென்றாய்? களங்கமில்லாத நின்முகத்தைக் காணாது கலங்குகின்றோம் பாரினிலே பாவிகள் நாம்.

உமது பிரிவால் துயருறும்:

திரு. திருமதி துரைராசா குடும்பம்

வை: இராசரத்தினம், கேணியடி, குப்பிளான்.

(49100)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர ஆண்டு ஆவணி மீ 7 ஆம் திகதி சனிக்கிழமை [23 - 08 - 1997] சஷ்டி திதியில அச்சுவினி நட்சத்திரமும் கூடிய சுபயோக தினத்தன்று பகல் 1. 36 மணிமுதல் 2. 15 மணி வரையிலான சித்தயோகம் கூடிய தனு லக்கினத்தில்

தொண்டமானாறு சந்நிதி
திரு. சி. சந்திரசேகரம்
பரமேஸ்வரி
தம்பதிகளின் புதல்வன்

திருநிறை செல்வன்
## சிறிரஞ்சன்
(மங்கை சில்க், சுன்னாகம்.)
அவர்களுக்கும்

அமரர்
செ. விசாகரத்தினஐயர்
சிரேஷ்ட பேர்த்தி
திரு. வி. தெய்வேந்திரஐயர்
மாணிக்கம்
தம்பதிகளின் ஏக புதல்வி

திருநிறை செல்வி
## மகேந்திரராணி
அவர்களுக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)

திரு. சி. சந்திரசேகரம்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்
வவுனியா)

திருமதி சந்திரசேகரம் பரமேஸ்வரி
596/4 கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

திரு. வி. தெய்வேந்திர ஐயர்
(செல்வச்சந்நிதி ஆலய பூசகர்
இயக்குநர் ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை)

திருமதி மாணிக்கம் தெய்வேந்திரன்
செல்வச்சந்நிதி,

(49102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. தே. க. வின் கண்டனக் கூட்டங்களில் காடையர் தாக்குதல்

கொழும்பு, ஓக. 20

அரசு ஆட்சிக்கு மூன்று ஆண்டுகள் முடிவடைந்தும் தேர்தல் காலத்தின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதி களை நிறைவேற்றாததைக் கண்டித்து ஐ. தே. கட்சியால் நாடெங்கும் நடத்தப்பட்ட கண்டனக் கூட்டங்கள் காடை யர்களால் தாக்கப்பட்டிருந்த சம்பவங்கள் குறித்து பொலீ ஸாருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஹங்குரான்கொட, கடுவெல, இரத்மலானை, ஆனை மடுவ, சிலாபம், வத்தளை ஆகிய தேர்தல் தொகுதிகளில் இத்தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

நாவலப்பிட்டியில் ஐ. தே. கட்சி கண்டனக் கூட்டம் நடத்த ஒழுங்கு செய்திருந்த இடத்துக்கு அண்மையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் கூட்டம் ஒன்றை நடத்த முற்பட்டனர்.

இருபகுதியினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட விருந்த சமயம் பொலீஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நாவலப்பிட்டி நகரில் பல இடங்களில் வீதிகளில் ரயர் கள் போட்டு எரிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10)

## சைவப்பணியை முன்னெடுக்க நல்லூரில் துர்க்கா சிறுகுடில்

### நாளை திறப்புவிழா நடைபெறுகிறது

நல்லூர், ஓக. 20

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மேலை வீதியில் சைவப்பணிகளுக்கும் உற்சவ கால அறப்பணிகளுக்குமென சிறுகுடில் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தினர் அமைத்துள்ள இந்த சைவப்பணி நிலையத்துக்கு ''துர்க்கா சிறுகுடில்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

''துர்க்கா சிறுகுடில்'' திறப்பு விழா நாளை வியா ழக்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமய சம்பந்தமான ஒன்று கூடல்கள், மாநாடுகள் ஆகியவற்றை நடத்துவதற்கு வசதியான மண்டபம் ஒன்றும் இந்தச் சிறுகுடிலில் உண்டு.

சமயப் பணிகளை முன் னெடுக்கவென, அன்ன தானம் போன்ற தர்மப்பணி களை ஊக்குவிக்கவும் இந்த நிலையம் பெரிதும் உதவும் என்று சைவாபிமானிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

பெரிய வீடு ஒன்று அமைந் திருந்த இடத்தில், அதற்குப் பதிலாக இந்தப் புதிய சிறு குடில் அமைக்கப்பட்டிருக் கிறது.

(அ-103)

## சனசமூக நிலையங்கள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 20

நவாலிப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறியும் சில சன சமூக நிலையங்கள் இன்னும் இயங்க ஆரம்பிக்கவில்லை. நவாலி வடக்கு சனசமூக நிலையம், நவாலி மேற்கு சனசமூக நிலையம், வளர் மதி சனசமூக நிலையம் ஆகிய சனசமூக நிலையங் களே இன்னும் இயங்க வில்லை.

(இ-15)

## விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

உடுவில் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பகுதி விவசாயிகள் சிலர் எரி பொருள் பற்றாக்குறை யினால் தமது பயிர்ச்செய் கையை இடையில் கைவிடும் நிலையில் இருந்து வருகின்ற னர்.

(இ-15)

## இறைச்சிக்கானநல்லின கடா இங்கு தருவிப்பு

வலிகாமம் தெற்கு ஓக. 20

யாழ். குடாநாட்டிலுள்ள வர்களின் ஆட்டிறைச்சித் தேவைக்கென, நல்லின இறைச்சி ஆடுகள் உற்பத்தி செய்யப்பட உள்ளன.

திருநெல்வேலி விவசாயத் திணைக்களம் இதற்காக ''ஜேர்மன்-போயர்'' என்ற நல்லின ஆட்டுக்கடா ஒன்றி னைத் தருவித்துள்ளது.

இலங்கை விவசாயத் திணைக்கள கால்நடை வளர்ப்பு பிரிவினர் ஜேர்மனி யில் இருந்து ஏழு ''ஜேர்மன்-போயர்'' ஆட்டுக் கடாக் களை இறக்குமதி செய்து திருமலை உப்புவெளி பண் ணையில் வைத்திருந்தனர்.

இவற்றில் ஒன்றே அண் மையில் திருநெல்வேலிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(இ-152)

## விவசாயிகளுக்கு விதை நெல்

அரியாலை விவசாயிகள் சம்மேளனத்தில் விதை நெல் பெறுவதற்காக தமது பெயர் களைப் பதிவு செய்து கொண் டவர்கள் சம்மேளனத்தின் செயலருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சம்மேளனத்தில் பதிவு செய்தவர்களுக்கு வழங்க வென 300 புசல் விதைநெல் யாழ். கமநல சேவைகள் கேந்திர நிலையத்தால் ஒதுக் கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கின்றது.

(இ-5)

## கணனி குறித்து கருத்துரை

யாழ்ப்பாணம். ஓக. 20

''கணனி வலையமைவு — உள்ளக வலையமைவில் இருந்து வலையிடைவலை வரை'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறைத் தலைவர் உரை நிகழ்த்துவார்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதி கத்துறை விரிவுரை மண்டபத் தில் நடைபெறும் இந்த நிகழ்வை, யாழ்ப்பாண விஞ் ஞான சங்கத்தின் பிரயோக விஞ்ஞான, தொழில் நுட்பப் பிரிவு ஏற்பாடு செய்துள் ளது.

இதில் பங்குபற்றுமாறு ஆர்வலர்களுக்கு பிரஸ்தாப சங்கம் அழைப்பு விடுத்துள் ளது.

(இ)

## தமிழ்ப் பாட நூல்களில் சிறந்த பிறமொழி ஆக்கங்களை புகுத்தியவர்

### பெனடிக்றபாலன் நினைவுக் கூட்டத்தில் உரை

''1972 இல் கல்விச் சீர் திருத்தம் அறிமுகம் செய்யப் பட்ட போது அப்போதைய தமிழ்ப் பாடநூல்கள் மாண வர்களுக்கு ஏற்றதாக இருக்க வில்லை. இதனை நிவர்த்தி செய்ய பிறமொழிகளில் காணப்பட்ட சிறந்த ஆக்கங் களை தமிழ்ப் பாடநூல்களில் அறிமுகப்படுத்தியவர் மறைந்த எழுத்தாளர் பென டிக்ற் பாலன்''.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைசிரேஷ்டவிரி வுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

எழுத்தாளர் காலஞ் சென்ற யோ. பெனடிக்ற் பாலன் மறைவு குறித்த அஞ் சலிக் கூட்டம் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் யாழ். வலயம்-1 பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தர லிங்கம் தலைமையில் நடை பெற்றது.

நண்பர்களும் வாசகர்களும் இணைந்து நடத்திய இக் கூட்டத்தில் சபா ஜெயராசா மேலும் பேசுகையில், எழுத்து, சமூக மாற்றத்துக்கு உரியதாக அமைய வேண்டும் என்ற கருத்துடையவர் பென டிக்ற் பாலன்.

மார்க்சிய சிந்தனைகளை உள்ளடக்கியதாக பாடநூல் களைத் தருவதில் அவர் வெற்றி கண்டார்.

மார்க்சியத்தை எழுத்தின் அடித்தளமாக, ஆழமாகக் கொண்ட பெனடிக்ற் பாலன் இந்த நாட்டின் இலக்கியத் துறையில் தனிமுத்திரை பொறித்தவர் என்றார்.

பிரதி கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் தனது தலைமை உரையில் இலங் கையின் பல்வேறு இன மக் களுடனும் ஒன்றிப்பழகி தான் பெற்ற அனுபவங்களை தனது கதைகளினூடாக மக்களுக் குத் தந்தவர் பெனடிக்ற் பாலன்.

பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியராகப்பணியாற்றிய அவர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பதிப்பாள ராகவும் பின்னர் பிரதிக்கல் விப்பணிப்பாளராகவும்சேவை யாற்றினார்.

145 க்கும் மேற்பட்ட சிறு கதைகளை எழுதிய அவருக்கு தனது படையிலக்கியங்கள் முழுவதையும் நூலுருவில் கொண்டு வரமுடியவில்லை என்ற கவலை இருந்தது என்றார்.

யாழ். கல்வித்திணைக்கள உத்தியோகத்தர் தவராஜா பேசும் போது கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்த பென டிக்ற்பாலன் கல்வியின் மூலம் தான் உயர் நிலையை எட்ட முடியுமென்பதை கருத்தில் கொண்டு படித்தார்.

சாதாரண வசதி குறைந்த மக்கள் படிக்கவேண்டும் என் பதற்காக தன்னுடைய வேலைகளைத் தள்ளிவைத்து மாணவர்கள் பாடம் கேட்க வரும் போதெல்லாம் மன நிறைவுடன் அவர்களுக்கு உதவினார்.

நலிவுற்ற மக்கள் மேல் நிலை எய்த வேண்டுமென் பதற்காக இறுதிவரை இலக் கியங்களினூடாகவும், நடை முறையிலும் உதவிய அவரின் மறைவு தமிழ்உலகுக்குபெரும் இழப்பாகும் என்றார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் வே. யுகபாலசிங்கம், கோப்பாய் கிறிஸ்தவ கல் லூரி ஆசிரியர் சட்டநாதன் ஆகியோரும் உரையாற்றி னார்கள்.

(இ-103)

# 5 மணிநேரம் மூத்த ஆசிரியர்களை இருத்தி வைத்த தரம்-1 பரீட்சை!

பரீட்சை! பரீட்சை! என மாணவர்கள் மிரண்டு கொண்டிருந்த வேளையில் ஆசிரியர்களையும் பரீட்சை விட்டு வைக்கவில்லை. இந் தப் பரீட்சையை ஆசிரியர் களும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி சந்தித்து விட்டனர்.

இலங்கை ஆசிரியர்களின் வரலாற்றில் 1997 ஓகஸ்ட் 2 ஆம் திகதி மிகமுக்கியமான ஒரு நாள். ஆசிரியர்களை தகுதி நிலையில் — ஆகக் கூடிய நிலையான முதலாம் தரத்துக்கு — பதவி உயர்த்து வதற்கான பரீட்சை நடை பெற்றது.

இதற்கு முன்பு ஆசிரியர் களில் இருந்து அதிபர்களை தெரிவு செய்வதற்கும், கல்வி நிர்வாக சேவை அதிகாரிக ளைத் தெரிவு செய்வதற் கும் மற்றும் வேறு பதவிக ளுக்கும் பரீட்சைகள் நடை பெற்றன. ஆனால் ஆசிரியர் களை ஆசிரியர்பதவியில் தரம் உயர்த்துவதற்குப்பரீட்சைகள் நடை பெறவில்லை.

புதிய ஆசிரியர் சேவை அமைப்பில் ஆசிரியர் தர வகைப்பாடு ஐந்து பிரிவுக ளாக வேறுபடுத்தப்பட்டுள் ளது.

3 ஆம் வகுப்பு — 2 ஆம் தரம், 1 ஆம் தரம்.

2 ஆம் வகுப்பு — 2 ஆம் தரம், 1 ஆம் தரம்.

1 ஆம் வகுப்பு—

3 ஆம் வகுப்பு 2 ஆம் தரம் 1 ஆம் தரம் —

2 ஆம் வகுப்பு 2 ஆம் தரம் 1 ஆம் தரம் — என்பவற் றுக்கு சேவை மூப்பு; கல்வித்

### குறையும் நிறைவும்

தரத்தின் அடிப்படையில் ஆசிரியர்கள் உள்வாங்கப் பட்டு விட்டனர்,

ஆசிரியர் வகுப்பு 1 (தரம் 1) க்கு இதுவரை நியமனம் இடம் பெறவில்லை. அதற்கு தரம் உயர்த்துவதற்காகவே 2 ஆம் திகதி பரீட்சை நடை பெற்றது.

ஆசிரியர் தரம் 1 பரீட் சைக்கு இலங்கை முழுவதி லும் 14 ஆயிரத்து 500 ஆசி ரியர்கள் தோற்றியதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்தது.

இந்தப்பரீட்சைக்கு தோற் றுவதற்கு வயதுத்தகுதி 60 வரை தளர்த்தப்பட்டிருந்த தால் ஓய்வு பெறுவதற்கு முன்னர் பரீட்சையில் சித்தி யடைந்து விட்டால், முத லாம் தரத்தில் உயர்சம்பள விகிதத்தில் ஓய்வூதியம் பெற லாம் என்ற விருப்போடு 59 வயது 11 மாதம் 29 நாள் வரை உள்ள மூத்த ஆசிரியர் கள் மிக ஆர்வத்தோடு பரீட் சைக்குத் தோற்றினர்.

யாழ். மாவட்டத்தில் வேம் படி மகளிர் கல்லூரியில் இரண்டு பரீட்சை மண்டபங் கள் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்தன (மண்டபம் I, II) 450 க்கு மேற்பட்ட ஆசிரியர் கள் பரீட்சைக்குத் தோற்றி னர். பெரும்பாலானோர் ஆசிரியர்கள் இதிலும் கணிச மான எண்ணிக்கையினர் 59 + வயது நிலையில் உள் ளவர்கள்,

பரீட்சை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக் கப்பட்டிருந்தது. இரண்டு வினாத்தாள்கள்.

I பிரயோகக்கல்வி உளவிய லும் நவீனகல்வி நடை முறைகளும்—3 மணிநேரம்.

**- ஞானஆதவன் -**

II பொது அறிவு—$1\frac{1}{2}$ மணி நேரம்.

பரீட்சை மண்டபத்தில் உரியநேரத்துக்குப்பரீட்சார்த் திகள் கூடி இருந்த போதி லும் 2 மணிநேரம் தாமதித்து பரீட்சை ஆரம்பமாகியது. காரணம் வெளிமாவட்டங் களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிச் செல்ல முடி யாத பரீட்சார்த்திகளும் யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுதினர்.

பரீட்சார்த்திகளின் எண் ணிக்கை அதிகரித்தமையால் வினாத்தாள்கள் போட் டோஸ்ரட் பிரதிகள் மூலம் தயார் செய்யப்பட்டதால் பரீட்சை தொடங்குவதில் இரண்டு மணி நேரம் தாமத மாகியது என அறிவிக்கப்பட் டது.

மூன்று மணி நேரம் தொடர்ந்து ஒரே இடத்தில் இருந்து பரீட்சை எழுதவேண் டுமே என அவலப்பட்டுக் கொண்டிருந்த மூத்த ஆசிரி யர்களுக்கு 5 மணி நேரத் துக்கு மேல் தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்தி ருந்த நிலை நாரி உளைவு, முதுகுவலி, கால்பிடிப்பு, கண் எரிச்சல் தலைச்சுற்று என பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாகினர் இவை பரீட்சை எழுதும் சூழ்நிலை யையும் குழப்பிவிட்டதாம்.

''இந்தவயதிலும் ஒரு சோதனையோ! தொடர்ந்து எத்தனை மணிநேரம் இருப் பது!'' என்றவிதத்தில் முணு முணுப்புக்கள் பரீட்சை மண் டபத்தில் இடை இடையே எழத்தொடங்கின.

பரீட்சை எழுத வந்தவர் களில் பலரைப் பேரப் பிள்ளைகள் மட்டுமல்ல; பூட் டப்பிள்ளைகளும் வாழ்த்து அனுப்பி வைத்திருந்தனர்: ''பரீட்சையில் சித்தியடைந்து உயர்ச்சி பெற.''

எப்படி இருந்தாலும் ''வாழ்க்கை முழுவதும் கல்வி'' என்ற கல்விக்கலா சாரம் இலங்கையில் ஆசிரி யர்கள் நிலையிலும் ஆரம் பித்து விட்டது. இது கல்வி யின் எதிர்காலத்தைப் பவிச் சிடச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் புகையிரத நிலைய ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டை உள்ளடக்கிய 6 பரப்புக் காணியும், கண்டி வீதி. சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியில், '20' பரப்பு மேட்டுக் காணியும், பகுதியாகவோ, ஒருமித்தோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஞா. குமாரசாமி, காளிகோயிலடி, டச்சு வீதி, சாவகச்சேரி. [49087]

வங்கிகள் பயன்படுத்தக் கூடிய கணனி, Table, Fan, சீலிங் Fan Parts விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 28/1. சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி. [49097]

3½ மாதம் நிரம்பிய பூச்சி நீக்கிய வெள்ளை பொமறியன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.நவரட்ணம், (49) 131/1 இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். [49099]

### தவறிவிட்டது

சில்வியா அந்தோனிப்பிள்ளை, என்பவரது 635770643X இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை, மற்றும் விசேட அடையாள அட்டை உத்தியோக அடையாள அட்டை என்பன தட்டாதெருச்சந்திக்கும் புதிய ஆனந்தா நகைமாடத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், ''செல்வம் இல்லம்'', சிவாலை, பண்டத்தரிப்பு. [49084]

தர்மலிங்கம் விஜயநாதன் என்பவரது 640242744V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை ஆகியவை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். பேக்கரி லேன், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். [49083]

### மணமகள் தேவை

இங்கும் தொழில் உள்ள ஜேர்மனியில் தொழில் செய்யும் குற்றமற்ற திருவாதிரை நட்சத்திர சாதகருக்கு அழகும், குணமுமுடைய மணமகள் தேவை. தொடர்பு: மணி ஐயா, (கதிர்காம கோயில்) நீர்வேலி வடக்கு. நீர்வேலி. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். [49094]

**SUBRA**
**சித்தன் கேணி**
**98, 99 A/L**
**கணக்கியல்**
**திரு. கொலின்ஸ்**
**ஆரம்பம்: 21-08-97**
காலை 7 மணி
(48089)

**தையற் பயிற்சி**
**(3ஆவது தொகுதி)**
**ஆரம்பமாகிறது**
bY
**திருமதி து. தவமணிதேவி**
அனுமதிகள் ஆரம்பமாகி விட்டன.
**தூரிகை**
**சட்டநாதர் வீதி,**
**நல்லூர்.**
(49075)

### மணமகன் தேவை

லண்டன், Book Keeping பரீட்சையில் மூன்று பகுதியும் சித்தியடைந்து, ஆங்கிலத்திலும், கம்பியூட்டரிலும் டிப்ளோமா பயின்று கொழும்பில் நல்ல உத்தியோகத்தில் இருக்கும் மூலநட்சத்திர ஏழில் செவ்வாயுள்ள 5'-6" உயரமான மணமகளுக்கு மணமகன் தேவை. லண்டன், கனடா, ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவுடமையுள்ளவர்கள் விரும்பத்தக்கது. திருமதி இ. நாகராசா, பக்கஸ் ஒழுங்கை, மானிப்பாய். (49074)

### வீடு விற்பனைக்கு

பரி. யோவான்னை ஓரியின முன்னாள் அதிபர் T. குணசீலனது 12, சுவாட்ஸ்லேன், சுண்டுக்குளியிலுள்ள வசதியான வீடும், காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. J.J அற்புதராஜா, 25, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி. [48955]

### தேவை

தையல் மெஷின் தேவை. விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல: 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (49076)

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்
### மருதனார்மடம்
**சுன்னாகம்**

இம்மாதம் ஆவணி 21ஆம் திகதி வியாழக்கிழமை ஆச்சிரமத்தின் 58ஆவது ஆண்டு விழா முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெறும். நண்பர்கள் யாவரையும் இவ்விழாவில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வண சேவக்**
**சாமுவேல் தேவரத்தினம் அல்பிரேட்**
**சாம் அண்ணா**

### ★ நிகழ்ச்சி நிரல் ★

காலை 7-30 மணி — பரிசுத்த நற்கருணை ஆராதனை
காலை 9-00 மணி — திருமுழுக்கு ஆராதனையும் நன்றி செலுத்தும் ஆராதனையும்
காலை 11-00 மணி — கலந்துரையாடல்
மதியம் 12-00 மணி — மதிய ஜெபம்
பிற்பகல் 3-00 மணி — பகிரங்கக் கூட்டம்

(49071)

## 5 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



### அமரர் வேலுப்பிள்ளை கந்தையா

பிறப்பு: 08—05—1924
இறப்பு: 15—09—1992

**திதி: 20 - 08 - 1997**

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
அன்பு காட்டி எம்மை அரவணைத்த ஐயாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஐந்தாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தனங்களப்பு,
சாவகச்சேரி.

(49072)

சுருவில்
## பூர்ணா புஷ்கலாதேவி சமேத ஹரிஹரபுத்திர ஐயனார் கோயில்
## அந்தரீத பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**கிரியை ஆரம்பம்:- 20- 08 - 97 புதன்கிழமை,**
**மகா கும்பாபிஷேகம் 22 - 08 - 97 வெள்ளிக்கிழமை**
காலை - 8-05 - 9-05 வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்.


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்; ஐயப்பனின் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

- பரிபாலனசபை

(சி-1342)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 28 — 03 — 1942



உதிர்வு: 11 — 07 — 1997

### அமரர் நல்லதம்பி குலசிங்கம்

(பதவி நிலை உதவியாளர், பிரதேசசெயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.)

பாசத்துடன் எமை வளர்த்து ஆளாக்கிய அன்புத்தந்தையே! எந்நாளும் உமை மறவோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (20-08-1997) இல் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், சக உத்தியோகத்தர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மைத்துனர்கள்.**

ஈஸ்வரி பவனம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(49060)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 — 12 — 1927



உதிர்வு: 27 — 08 — 1991

கைதடி வாசியும், பொலன்னறுவை லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், நாவற்குழி சிவா அரிசி ஆலை உரிமையாளருமாகிய

### அமரர் முருகேசு அம்பலவாணர்
**(தம்பிஐயா)**

**திதி: 20—08—1997**

ஆலமரம் சாய்ந்தபோது விழுதுகள் அருகில்லை
அந்தவேதனை தாங்காது எங்கள் இதயம்
ஆறு ஆண்டுகள் ஓடிமறைந்தாலும் ஐயா
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாயிருந்து
அன்பையும் பாசத்தையும் சொரிந்த
உங்கள் நினைவு எமது மனதை விட்டு நீங்காது!

- குடும்பத்தினர்

''ருக்ஷி வாசம்''
கைதடி வடக்கு,
கைதடி.

(48992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம்.

# நாடாளுமன்ற கூட்டத்திலிருந்து ஐ.தே.க. உறுப்பினர் வெளிநடப்பு

## கோரம் இல்லாமல் சபை நடவடிக்கை ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 20

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்து நாடாளுமன்றக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதனால் கோரம் இல்லாமல் நாடாளுமன்றக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

கடந்த 3 வருடங்களில் அரசாங்கம் மேற்கொண்ட அநீதிகளை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தை பகிஷ்கரிப்பதாக விஜயபால மெண்டிஸ் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நடைபெற வேண்டுமானால் சபாநாயகர் உட்பட குறைந்தது 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமுகமளிக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால் 19 பேர் மட்டுமே நேற்றுச் சமுகமளித்திருந்தனர்.

எனவே சபாநாயகர் கே.பி. ரத்தினாயக்கா நாடாளுமன்றக் கூட்டத்தை இன்று காலை 9.40 மணிவரை ஒத்தி வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பற்றிய விவாதமே நடைபெற இருந்தது.

கோரம் இல்லாமல் நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது: கடந்த பத்துவருட காலத்தில் இதுதான் முதல்தடவை என்று சொல்லப்படுகிறது.

அதுவும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மூன்று வருடகால ஆட்சி பூர்த்தி விழாவுடன் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இதற்கிடையில் நியாயமான காரணங்களின்றி நாடாளுமன்ற விவாதங்களில் கலந்து கொள்ளாத அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற விவாதங்களில் அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பங்கு பற்றுவது குறைந்து வருவதால் சமீப காலங்களில் அரசாங்கம் பல அசௌகரியங்களுக்கு உட்பட்டதாலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (இ10)

## உதயன்

### புதிய முயற்சி வெல்லுமா?

தனது அதிகாரப் பரவல் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்க மாட்டாது. அதனை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற இயலாது என்று அரச தரப்பு முழுமையாகவே உணர்ந்துள்ளதாக. கண்டுபிடித்து விட்டதாகத் தெரிகிறது!

அதனாலேயே, அதிகாரப் பரவல் திட்டம் உட்பட்ட அரசமைப்பு மாற்றங்களுக்குக் கருத்துக் கணிப்பு மூலம் மக்களிடம் நேரடியாக அனுமதி பெறும் மாற்றுவழி குறித்து அரச உயர்மட்டம் அடிக்கடி பிரஸ்தாபித்து வருகிறது.

இப்போது புதிய வழிமுறை ஒன்று குறித்தும் தகவல்கள், ஊகங்கள் கசியத் தொடங்கியுள்ளன. இப்போதைய நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி, அதிகாரப் பரவல் — திட்டம் அரசமைப்பு மாற்றங்களை அங்கு அறுதிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவது குறித்து அரசு ஆலோசனை செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இது விடயத்தில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

எப்படியோ....

ஐக்கிய தேசியக்கட்சியும் ஏனைய தென்னிலங்கை அரசியல் பிரிவுகளும் இதனை ஆதரிக்குமா என்பதே பெரும் கேள்விக்குரியதாகும்.

இப்போதைய நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபை ஆக்குவதற்கு அரசாங்கம் மக்கள் ஆணையைப் பெறவில்லை. 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஸ்ரீ. ல. சு. கட்சி, புதிய நாடாளுமன்றை அரசமைப்பு நிர்ணய சபையாக்குவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில்தெரிவித்து தேர்தலில் வென்று அந்த முடிவுக்கு மக்களின் ஆணையைப் பெற்றிருந்தது.

இதனால் இந்த விவகாரம் அப்பொழுது பெரிதாக சர்ச்சை எதனையும் கிளப்பவில்லை.

இப்போதைய நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணயசபையாக மாற்றுவதாயின் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தி அதற்கு மக்கள் ஆணையைப் பெற்றாக வேண்டும்.

போர் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் — பொருளாதாரத் தாக்கங்களை, மக்களின் வாழ்க்கை நிலைக் கஷ்டங்களை, மக் முன்னிறுத்தி அரச எதிர்ப்புப் 'போர்' நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உஷார் அடைந்திருக்கும் சூழ்நிலையில் —

கருத்துக் கணிப்பில் அரசு வெற்றி காணமுடியும் என்பது நிச்சயமற்றதாகும்.

அரசு தனது பிரசார இயந்திரத்தை முழு அளவில் இயக்கி, தேர்தல் தந்திரோபாயங்களையும் கையாண்டு. கருத்துக் கணிப்பில் வென்றால் பெரும் சாதனையாகி விடும்.

இல்லையேல் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்த நேரிடும். அதன் முடிவும் பாதகமாகி விட்டால் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் புதிய பாடமாகத் திறக்கப்படும். அவ்வளவுதான்.

அது வரை போர் தொடருமாயின் அரைவாசித் தமிழர் அழிந்துவிடக் கூடும்; யார் அறிவார் அதனை?

## வாரம் இரு நாள்களே மீன் பிடிக்க அனுமதி

கொழும்பு ஓக. 20

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் விமானப் படையினரின் அனுமதி பெற்று வாரத்துக்கு 2 நாள்கள் மட்டுமே மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப் படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் மீன்பிடித் தொழில் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் மீன்பிடித்து வாழ்க்கை நடத்துகின்ற மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. (இ-4)

## அரசியல் பழிவாங்கலுக்குள்ளான 104 பொலீஸாருக்கு நிவாரணம்

கொழும்பு, ஓக 20

அரசியல் பழிவாங்கலுக்கு இலக்கான 104 பொலீஸ் அதிகாரிகளுக்கு நிவாரணம் வழங்குமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான பொலீஸார் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதியால் கடவத்த ஆராட்சி தலைமையில் நியமிக்கப்பட்ட தனிநபர் கமிசனே இந்த சிபார்சைச் செய்துள்ளது.

அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்ட 44 பிரதம பொலீஸ் அதிகாரிகளில் 12 பேருக்கு உச்சபதவி உயர்வு, 32 பேருக்கு இரு விசேட சம்பள உயர்வு வழங்குமாறும்— 60 இன்ஸ்பெக்டரில் 10 பேருக்கு பதவி உயர்வு, ஏனையோருக்கு இரு விசேட சம்பள உயர்வு வழங்குமாறும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (இ-150-3)

## வாரிவளவு கற்பக விநாயகர் கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக. 20

கடந்த 1991 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் பூட்டப்பட்டிருந்த காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் கோயில் புனரமைக்கப்பட்டு அந்தரித பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 9 30 மணி வரை நடைபெறவிருக்கிறது.

இக் கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் நாளைக் காலை 8 மணி முதல் நடைபெறும்.

இக் கும்பாபிஷேகத்தைக் கோப்பாய் சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் நடத்தி வைப்பார்:

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ''சிவத்தமிழ் வித்தகர்'' சிவமகாலிங்கம் நாளை மாலை 5 மணிக்கு ''வித்தக விநாயக விரைசழல் சரணே'' என்னும் தலைப்பிலும் —

நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு 'சமய வாழ்வின் அவசியம்' என்னும் தலைப்பிலும் — சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (இ-3)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## நல்லூரா போற்றி!

ஆறு மாமுகத்தாய் போற்றி
அடியவர்க்கு எளியாய் போற்றி
கூறுசெய் குமரா போற்றி
குஞ்சரர்க் இளையாய் போற்றி
மாறிலா வள்ளி போற்றி
வான் வளர் தெய்வானை போற்றி
ஈறிலா முருகா போற்றி
எங்கள், நல்லூரா போற்றி, போற்றி!
ஞானக்குருவே நல்லூர்க் கந்தா
கானக்குறத்தி வள்ளிக் கந்தா
வானக்குயில் தெய்வானைக் கந்தா
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டி

கொழும்புத்துறை, ஓகஸ்ட்20

கொழும்புத்துறை மேற்கு பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

யாழ். உள்ளூராட்சி ஆய்வுச் செயலர் சு. பரஞ்சோதி இந்த விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (இ-5-30)

## கலப்பின கோழிக்குஞ்சு விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக 20

கிராமிய திறந்தவெளி வளர்ப்பு மற்றும் பகுதி அடைப்பு முறைகளில் வளர்த்து பயன்பெறக்கூடிய கலப்பினக் கோழிக்குஞ்சுகளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் விநியோகிக்க உள்ளது.

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினரின் கரந்தகொல்ல பண்ணையில் இருந்து பெறப்பட்ட ஆர் ஐ ஆர்., ஒஸ்ரலொப், றோவைற் ஆகிய இனங்கள் கலந்த சேவல், பேடு எனப் பால் பிரிக்கப்படாத ஒரு நாள் குஞ்சுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படவுள்ளன.

குஞ்சு ஒன்றின் விலை ரூ. 20/- ஆகும்.

இவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தத்தமது கால்நடை வைத்திய அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## பீடாரோகண விழா

யாழ்ப்பாணம் ஓக. 20

இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 32 ஆவது பீடாரோகண விழாவும் 'இந்து தர்மம்' - மலர் 14 வெளியீட்டு விழாவும் ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவார்.

சிவாகமகிரியா ஞான திலகம் சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் வாழ்த்துரையையும் பரமேஸ்வரா நம்பிக்கைப் பொறுப்புத் தலைவர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சிறப்புரையையும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வெளியீட்டுரையையும் நிகழ்த்துவர்.

ஆதீனப் பயிற்சிக் கல்லூரியில் பயின்று சித்தியடைந்தோருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். (இ-5)

## கிராம அபி. சங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 20

திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைக்கப்பட்டு மீண்டும் தனது சேவையை ஆற்றத் தொடங்கி உள்ளது. (இ-5)

## இடை வழியில மயங்கி மரணம்

தென்மராட்சி, ஓக. 20

மூச்சு விடுவதற்கு அவஸ்தைப்பட்ட மனைவியை தனியார் வாகனத்தில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்த கணவர் இடைவழியில் மயங்கி மரணமான சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம் பெற்றது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதி மூத்ததம்பி கதிர்காமத்தம்பி (வயது 67) என்பவரே மரணமானவராவார்.

சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி மாரடைப்பால் மரணம் சம்பவித்ததாக தீர்ப்பளித்தார்.

ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட அவரது மனைவி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-117)

## மக்கள் நலன்புரி சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஆலய வீதிகளில் வீதித்தடை முகாம்களை அமைத்துள்ள தொண்டர்களின் சொல் கேட்டு நடந்து உற்சவகால தொண்டர் சேவைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பளைச் சந்தையில் இறைச்சிக் கடை

தென்மராட்சி, ஓகஸ்ட் 20

பளை பொதுச் சந்தையில் இரண்டு இறைச்சிக்கடைகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன. அத்துடன் நகரப் பகுதியில் உள்ள இரு பொதுக் கிணறுகளும் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியை அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் வழங்கி உள்ளது. (ஐ-117)

### நாளை

**ஆவணி 5**

வியாழக்கிழமை

திதி: திருதியை முற்பகல் 10 24 வரை.

நட்சத்திரம் உத்தரட்டாதி முன்னிரவு 9.38 வரை.

சங்கடஹரசதுர்த்தி விரதம்

சுபநேரம்: 7.35 -9.05

ராகுகாலம்: 1 35 - 3.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

# ஸ்ரீலங்கா அரசுத் தரப்புக்கு ஆயுதங்களை வழங்காதீர்!

## அமெரிக்க அரசிடம புலிகள் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 20

அமெரிக்க அரசின் அனுமதியுடன் ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்த கிபிர் ரக ஜெட் விமானங்கள் மூலம் ஸ்ரீலங்காப்படையினர் தமிழ் பொது மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளுவதால் ஸ்ரீலங்கா அரசுக்கு இனிமேல் ஆயுதங்களை வழங்க வேண்டாமென விடுதலைப் புலிகள் அமெரிக்க அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனிக்குளத்தில் கத்தோலிக்க தேவாலயச் சுற்றாடலில் தஞ்சமடைந்திருந்த தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலின் போது 9 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்றும்—

26 பேர் காயமடைந்தனர் எனவும் — தெரிந்தவையே

ஸ்ரீலங்கா அரசு பொது மக்கள் மீது சகட்டுமேனிக்கு விமானத் தாக்குதல்கள் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதால் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டாம் என்று அமெரிக்க அரசுக்கு விடுத்த வேண்டுகோளில் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அரசு ராஜதந்திர மற்றும் இராணுவ உதவிகளை ஸ்ரீலங்காவுக்கு வழங்குவது ஸ்ரீலங்காவில் நிலவும் இனப்போரை நீடிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுவதாகவே அமையும் எனவும் —

ஸ்ரீலங்காவில் நிலவும் சிவில் யுத்தத்தில் பக்கம் சார வேண்டாம் என அமெரிக்காவைத் தாங்கள் கோருவதாகவும் —

விடுதலைப் புலிகளின் லண்டன் பணிமனை தெரிவித்துள்ளது. [உ-10-21]

### கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதி:

# நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற தவறியோருக்கு சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 20

வவுனியா, மட்டக்களப்பு கல்விக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத்தவறியோருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணி முதல் மாலை 4-30 மணி வரை யாழ். வலயம்-1 கல்வித்திணைக்களத்தில் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

25ஆம் திகதியும் மேற்படி நேர்முகப் பரீட்சைக்குதோற்றாத விண்ணப்பதாரிகளுக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேறு எச்சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது இவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் இயலுமானால் வவுனியா கல்விக் கல்லூரியில் இந்த நேர்முகப்பரீட்சைக்குதோற்ற முடியும் என்று வவுனியா கல்விக் கல்லூரி பீடாதிபதி செ. அழகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆரம்பக்கல்வி விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி போன்ற பாடநெறிகளுக்கான வெட்டுப்புள்ளிகளும் சற்றுக் குறைக்கப்பட்டு மேலும் ஒரு தொகுதியினரும் புதிதாக இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(இ-4)

## நோண்டாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சுற்றிவளைத்த படையினர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். அந்நபர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என படை வட்டாரங்கள் தெரிவித்தன.

**மானிப்பாயில்**

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக மானிப்பாய் — உடுவில் வீதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. கிரனேட் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும் தொடர்ச்சியாகக் கேட்டன.

அங்கு நடந்த சம்பவத்திலேயே மற்றைய இளைஞர் உயிரிழந்தார். இச்சம்பவத்தில் படைத் தரப்புக்கும் இழப்புகள் ஏற்பட்டதாகப் பேசப்பட்டது எனினும் அதனைச் சரியாக ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை.

(உ-3-15-90-100)

## கூரேயை விடுவித்து.....

(முதலாம் பக்கத் தொடர்)

விடுவிப்பதற்கான உத்தரவை நீதிமன்றம் நேற்று விடுத்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் கலாநிதி ஏ. ஆர். டி. அமரசிங்க, ஏ.எஸ். வியேதுங்க, கலாநிதி அசோகா டி இஸட் குணவர்த்தனா ஆகியோர் இத்தீர்ப்பை வழங்கினார்.

சிறிசேன கூரே சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பை அடுத்து சிறிசேன கூரே உடனடியாக நேற்று விடுவிக்கப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-4-5-10)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சிவபாக்கியம்

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவபாக்கியம் 19-8-97இல் காலமானார்.

அன்னார் நல்லையா சுப்பிரமணியத்தின் (J P.- சறோஜினி மில் உரிமையாளர்) அன்புமனைவியும், சறோஜினிதேவியின் அன்புத்தாயாரும், ப. மகேந்திரராஜாவின் (லங்கா சிமெந்து லிமிட்டெட்) மாமியாரும், சுகன்யா, ஜயந்தன், சோபிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் திருநெல்வேலி பொதுச்சந்தைக்கு அருகில் உள்ள தற்காலிக இருப்பிடமாகிய ஸ்ரீ கண்ணன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. சுப்பிரமணியம்,
(சமாதான நீதிவான்)
ப. மகேந்திரராஜா
(லங்கா சிமெந்து லிமிட்டெட்)

ஸ்ரீ கண்ணன் இல்லம்,
பொதுச் சந்தை அருகில்,
திருநெல்வேலி.

[49108]

## புளியங்குளத்தை

(முதலாம் பக்கத் தொடர்

தெரிவித்தது.

காயமடைந்த படையினரில் இருபது பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறப்பட்டது.

காயமடைந்த படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலமாகவும் அனுராதபுரம் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

படையினர் தரப்பில் 18 பேர் கொல்லப்பட்டதாகவும் —

அவர்களில் எட்டுப் பேரின் சடலங்களை தாங்கள் கைப்பற்றியிருப்பதாகவும் —

ஐம்பது படையினர் வரை படுகாயமுற்றிருப்பதாகவும்—

தமது தரப்பில் ஏழு புலிகள் வீரமரணமடைந்திருப்பதாகவும் —

'புலிகளின்குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

படையினரும், புலிகளும் மாறிமாறி கடும் பீரங்கி, ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன. கடும் யுத்தம் அங்கு தொடர்கின்றது.

இதே சமயம் —

மாங்குளம் பகுதிகளை நோக்கியும் நேற்று பரவலாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் —

இதனால் கட்டடங்கள் பல சேதமுற்றதாகவும் —

மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்திருந்ததால் உயிரிழப்புகள் காயங்கள் தவிர்க்கப்பட்டதாகவும் —

சில செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் நெடுங்கேணிப் பகுதியிலிருந்தும் நேற்று முன்தினம் இரவு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(உ-21-164-10-5-4)


# விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
ACCOUNTING
திரு. பாலவாசன்
A/L 98
வருமானச் செலவுக் கணக்கு
ஆரம்பம்:- 23-08-97
பிப 2.00 - 3.30
[49096]


# யுத்தத்தை நிறுத்தக் கோரி சமாதானக் குழு அறிக்கை

கொழும்பு, ஓக. 20

'ஜெய சிகுறு' இராணுவ நடவடிக்கையை நிறுத்தக் கோரி யாழ். மறைமாவட்ட நீதி மற்றும் சமாதானக் குழு அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருக்கின்றது.

யுத்தம் எமது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து மக்கள் இன்னமும் மீளமுடியாமல் இருக்கின்றார்கள்.

இந்த வேளையில் தற்போது நிகழ்கின்ற வன்னி யுத்தம் எமது சமூகத்தின் எதிர்காலத்தினை கேள்விக் குறி ஆக்கியிருக்கின்றது.

இந்தக் கொடிய யுத்தத்தினை உடனே நிறுத்தி அப்பாவி மக்களின் துன்பங்களை உணர்ந்து நீதியுடன் கூடிய சமாதானத்தினை காண்பதற்கு அனைத்து தலைவர்களும் முன்வர வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் வெலிக்கடைக்கு!

இலங்கைக்கு வந்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் நேற்று வெலிக்கடைசிறைச்சாலைக்கு விஜயம் செய்தனர். அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை அவர்கள் சந்தித்துப் பேசினர். (உ-21)

## தீர்வுத் திட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

ருந்தார்.

**மூன்றில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டது**

யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப் பாதையில் மூன்றில் ஒருபகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 3 வருட ஆட்சியில் 8 மாதங்கள் சமாதானப் பேச்சில் நாங்கள் ஈடுபட்டோம். ஆனால் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை முறித்துக் கொண்டனர்.

**யுத்தத்தில் அரசுக்கு ஆர்வமில்லை**

அரசுக்கு யுத்தத்தில் ஆர்வமில்லை. ஆனால் யுத்தத்திற்கு விடுதலைப் புலிகளால் வலிந்து இழுக்கப்பட்டோம். இருப்பினும் நாங்கள் தீவிரவாதிகளுக்கு எதிராகவே யுத்தம் செய்கிறோம். தமிழ்மக்களுக்கு எதிராக அல்ல அது.

கடந்த அரசு வட்ட மேசை மகாநாடுகள், திம்பு பேச்சு. இலங்கை—இந்திய ஒப்பந்தம் என எடுத்த முயற்சிகள் எவையும் பயனளிக்காத காரணத்தால் எனது அரசு ஆட்சிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுக்கு நேசக்கரத்தை நீட்டி நேரடியாகப் பேசினோம். ஆனால் அவர்கள் ஒத்துழைப்பைத் தரவில்லை.

**தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவோம்**

எனது அரசு தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி: ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவை வழங்கினாலும் சரி வழங்கா விட்டாலும் சரி தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றுவோம்.

பெரும்பான்மை பொது மக்கள் அனுமதி வழங்கினால் அதன் பின்னர் சில அடிப்படைகளின் கீழ் — நிபந்தனைகளுக்கு உட்பட்டு — விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் தயாராகவுள்ளோம்.

**கட்டாய ராணுவ சேவையை ஆதரிக்கிறேன்**

ஏழைக் குடும்பங்களின் பிள்ளைகள் தான் படைகளில் சேருகிறார்கள்; நாட்டிற்காகத் தியாகம் செய்கிறார்கள்; பணக்காரர்களின் பிள்ளைகள், அமைச்சர்களின் பிள்ளைகள் படைகளில் சேர்வதில்லை என்ற கருத்து நிலவுகிறது.

இதற்காகத்தான் கட்டாய இராணுவ சேவையை நான் ஆதரிக்கிறேன். கட்டாய இராணுவ சேவை நடைமுறைப் படுத்தப்பட்டால் அமைச்சர்களின் பிள்ளைகளும் படைகளில் பணியாற்றியே தீரவேண்டும்.

கொழும்பில் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது வேதனையானது. ஆனால் விடுதலைப் புலிகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை, முக்கிய பிரமுகர்களை இலக்குவைத்து தாக்கி வருகிறார்கள். இதற்காக அப்பாவித் தமிழ் மக்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துகிறார்கள்: கட்டடங்களைத் தாக்கி அழிக்கிறார்கள்; ஏதுமறியாமக்களைக்கொல்கிறார்கள்; தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ளுகிறார்கள்; இவ்வாறான சூழ்நிலையில் அரசு வாளாதிருக்க முடியாது. அரசு என்ற நோக்கில் நாட்டு மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும். சிக்கலான வேளையில் பொது மக்கள் தங்களுக்கான பாதுகாப்பைத் தாங்களே தேடிக்கொள்ள வேண்டும் என முன்னைய ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் அதை நாங்கள் ஏற்கவில்லை.

எனவே தான் இவ்வாறான அழிவுகளைத் தவிர்ப்பதற்காகவே சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

பிரபாகரன் தமிழனாகப் பிறந்தது குறித்து நான் மிகவும் வேதனையடைகிறேன். பிரபாகரன் எதுவுமறியா அப்பாவி மக்களை ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்.

**அநியாயமாக தமிழர் கைதாவது உண்மையே!**

தமிழ் மக்கள் சிலர் அநியாயமாகக் கைது செய்யப்படுகிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்: ஒரு சில இராணுவ, பொலீஸ் அதிகாரிகள் விரும்பிய விதத்தில் செயற்படுகிறார்கள்; ஊழலில் ஈடுபடுகிறார்கள்: அப்பாவித் தமிழ் இளைஞர்கள், யுவதிகளைக் கைது செய்து சில பொலிஸ் நிலையங்களில் தலா 25 ஆயிரம் ரூபா லஞ்சம் பெறுகின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன: இதைக் கேள்வியுற்றதும் மிகவும் ஆத்திரமடைந்தேன்; இது ஏற்க முடியாதது. இதற்கு இடமளிக்கக் கூடாது என பாதுகாப்புக் குழுவில் கடுமையாகத் தெரிவித்தேன்.

முன்னைய ஆட்சியில் ஊழல், லஞ்சம் ஆகியனவே தலைவிரித்தாடியது. எமது ஆட்சியில் அதற்கு முடிவு கட்டிக் கொண்டே வருகிறோம். இருப்பினும் ஊழலில் ஊறியவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள், அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்போம்.

பிரஜைகள் குழுக்கள் நிறுவப்படவுள்ளன. அதற்குச் சில அதிகாரங்களும் வழங்கப்படவுள்ளன. எனவே இனித் தமிழ் மக்கள் அநியாயமாக கைது செய்யப்பட மாட்டார்கள் — என்றார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 20-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org